# ॥ श्री - चन्द्रशेखरेन्द्रसरस्वती - पञ्चपञ्चाशत्क - स्तोत्रम् ॥

डा० वे. राघवः



# ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ
# பஞ்சபஞ்சாசத்க ஸ்தோத்ரம்

டாக்டர் வே. ராகவன்

श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वतीपादानधिकृत्य
कविकोकिल डा० वे. राघवेण
कीरवाणीरागे खण्डत्रिपुटताले
निबद्धा गीतिः

(द्रमिडानुवादसहिता स्वरतालयुता च)

★

ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ரஸரஸ்வதீ ஸ்வாமிகள் பற்றி
கவிகோகில டாக்டர் வே. ராகவன்
கீரவாணீ ராகத்தில் கண்டத்ரிபுட தாளத்தில்
இயற்றிய க்ருதி

(தமிழாக்கத்துடனும் ஸ்வரதாளக்குறிப்புகளுடனும்)

ण्डत्रिपुट:

ராகம் : கீரவாணி தாளம் : கண்ட த்ரிபுடை

## பல்லவி

சந்த்ரசேகரராம் சிறந்த குருவை ஆச்ரயிக்கிறேன்—ஸ்ரீ

## அநுபல்லவி

இந்த்ரஸரஸ்வதீ எனும் யதிச்ரேஷ்டர் ஆயிரம் பிறை கண்டவர்
ஆதி சங்கர பீடத்தின் அறுபத்தெட்டாம் குருவரர் ஸ்ரீ

## மத்யம காலம்

காமகோடி பீடாசார்யர், அத்வைதாசார்யர்
எல்லோரும் போற்றுமாசார்யர், காமாக்ஷீ-சந்த்ரமௌளீச் வரரை
இடையருது தியானிப்பவர், எப்பொழுதுமே உலகுக்கருள் வதில்
மிக உருக்கமுள்ளவர், ஸ்ரீ சரணர் ஸ்ரீ

## சரணம்

நிர்குணத்தில் (ப்ரஹ்மத்தில்) பற்றுடையவர், ஆயினும் குண முற்றோருக்கருள்புரிபவர்
பரமசிவ உருவங்கொண்டவர், ஆயினும் நாராயணனை எப்பொழுதும் நினைப்பவர்
கருணைபொங்கும் நோக்கினர்-தவநியமங்களால் மெலிந்தவர், புன்சிரிப்பு முகத்தினர்,
இனியமொழியினர், கையால் அபயமுத்ரை காட்டிடுவார், ஜனங்களுக்கு நன்மை ஆக்கிடுவார்,
காமனைக் கடிந்தவர். மிக ஸ்திரமான ஸ்ம்ருதி உடையவர்
கவிகோகில (ராகவனால்) பாடப்பட்டவர்—ஆயினும்
கீரவாணீ (சுகத்தின் வாக்கில்) ப்ரியமுடையவர்.

## மத்யம காலம்

வாக்கையடக்கியவர்—ஐயம் நீக்குபவர்
தத்வமஸி (மஹாவாக்யத்தை) த்யானிப்பவர், பொய்யை வெட்டி அழிப்பவர்
அகஸ்த்யர்போல சிறந்து பிறந்தவர், தென்திசை ஆசார்யர்
ஸ்ரீ ஜயேந்த்ரருக்கும் ஆசார்யர் (ஸ்ரீ சந்த்ர)

## ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ
## பஞ்சபஞ்சாசத்க ஸ்தோத்ரம்

(டாக்டர் வே. ராகவன் ஸம்ஸ்க்ருதத்தில் இயற்றியது.)

(தமிழாக்கம்)

ஆசார்யர்களுக்கெல்லாம் முடியணியாய் விளங்கும் ஸ்ரீசந்த்ர
சேகரருக்கு [சந்த்ரனை தலையில் சூடிய சிவபெருமானுக்கு]
மீண்டும் மீண்டும் வணக்கம் செலுத்துகிறேன். ஸ்ரீசங்கரரின்
(ஆசார்ய) பரம்பரையாம் அம்ருதக் கடலின் [உதித்த]
அம்ருத கிரணனுக்கு [சந்த்ரனுக்கு] வணக்கம். 1

ஸ்ரீமஹாதேவேந்த்ரரின் [ஸ்ரீமஹாதேவேந்த்ர ஸரஸ்வதீ
ஸ்வாமிகளின்] தாமரைக்கையினின்று தோன்றிய [ஸன்
யாஸம்—ஆசார்ய பீடம் பெற்ற] வருக்கு பல பல வணக்கம்.
காஞ்சீ [நகரத்து] ஸ்ரீகாமகோடி என்னும் பீடத்தின் உயர்
தலைவரான உமக்கு வணக்கம். 2

மஹாத்ரிபுரஸுந்தரீ, சந்த்ரமௌலீச்வரர் இருவரையும்
இடைவிடாது பூஜிக்கும் ஆனந்தம் நிரம்பியவருக்கு
வணக்கம். மீண்டும் வணக்கம். 3

ஸத்யவ்ரதம் எனும் க்ஷேத்ரத்தில் வஸித்தலில் இன்பம்
காணும் உமக்கு வணக்கம். காமாக்ஷீ, ஏகாம்ரநாதராம்
ஈச்வரர் இவர்களை ஸாக்ஷாத்கரித்த [நேரில் கண்டுணர்ந்த]-
வருக்கு வணக்கம். 4

மஹாதேவீ (பெருந்தேவி), ஹஸ்திகிரி நாதர் (அத்திகிரியின்
தலைவர்—வரதராஜர் எனும் தேவராஜர்) இவர்களுடைய
ஸாந்நித்யத்துடன் கூடியவரும் சிவாஸ்தானம் எனும்
இடத்தில் தனிமையை விரும்புபவருமான உமக்கு வணக்கம். 5

அத்வைதமதத்தை விளக்கும் [பாஷ்யம் முதலியவைகளான]
ஸிம்ஹாஸனத்தில் [வீற்றிருக்கும்] அரசனாகிய உமக்கு
வணக்கம்- ஆறுமதங்களின் உபாஸனையாம் பக்திமார்க்
கத்தை உயிர்ப்பிக்கும் மருந்தான உமக்கு வணக்கம். 6

வேதங்களை உத்தரணம் செய்யும் மத்ஸ்யமாகவும் (மத்ஸ்யா
வதாரம்) அம்ருதத்தை அளிக்கும் கூர்மமாகவும்
(கூர்மாவதாரம் போன்றும்) [உலகத்தை உய்விக்கும்] [பூ]
லோகத்தை உயர்த்திக் கொணரும் வராஹமாகவும்
[வராஹாவதாரம் போன்றும்] உள்ள நரஸிம்ஹரான
[மனிதர்க்குள் சிறந்த] [நரஸிம்ஹாவதாரம் போன்றும்
உள்ளவரான] உமக்கு வணக்கம். 7

[ப்ரபத்தி செய்த] சரணடைந்தவர்களின் மகிழ்ச்சியை
வளர்க்கும் அற்புத உருவங்கொண்ட [சரணடைந்த ப்ரஹ்
லாதனை மேம்படச் செய்யும் அற்புத (நரஸிம்ஹ) உருக்
கொண்ட] வரும், [மஹாபலியின்]யாக நிகழ்ச்சியில் மகிழ்
பவரும் [சிறுவனான ப்ரஹ்மசாரியான வாமனாவதாரம்
போன்ற] சிறுவயதிலிருந்தே ப்ரஹ்மசர்யம் மேற்கொண்ட
வருமான உமக்கு வணக்கம். 8

ஒளியால் உலகத்தை வ்யாபித்தவரும், கரை சேர்க்கும் தோணியாம் [பரிசுத்தமான] பாதங்களை உடையவரும் தர்மத்துக்கு அருளியவரும் [அருளால் தர்மத்தை நிலைநாட்டியவரும்] நற்குணங்களால் மனதைக்கவரும் ராமனாகிய [ராமாவதாரம் போன்ற] உமக்கு வணக்கம் 9

மூன்று யோகங்களையும் உபதேசிப்பவரும் [கர்ம, பக்தி, ஜ்ஞான யோகங்களை உபதேசித்த க்ருஷ்ணாவதாரம் போன்றவரும்] கருணை நோக்குடன் கூடிய (புத்தாவதாரம் போன்ற) மெய்ஜ்ஞானம் பெற்றவரும் கலிகாலத்தின் குற்றங்களைக் களைபவரும், [கல்கி அவதாரம் போன்றவருமான] மனிதர்களுள் சிறந்த [மஹாவிஷ்ணு போன்ற] உமக்கு வணக்கம், 10

நாராயணனை நினைப்பதால் நாராயண மயமானவரும், ஸ்ரீசக்ரத்தை உடையவரும் [பூஜிப்பவரும்], நன்கு பேசுபவரும், இனிமையான நல்லதோற்றத்தினால் பிரகாசிப்பவரும், ஆனந்தப்படுத்துபவரும் சங்கதீர்த்தம் அருளுபவருமான [நல்ல கதையை தரிப்பவரும், ஸுதர்சனம் என்னும் சக்ரத்துடன் விளங்குபவரும், நந்தகம் என்னும் கத்தியை தரிப்பவரும், ஆகவே விஷ்ணு போன்றவருமான] உமக்கு வணக்கம். 11

சிவனுக்கு வணக்கம். (எல்லாம்) எவனிடமிருந்து உண்டாகிறதோ, எவன் ஸம்ஸாரத்தை (பிறப்பு-இறப்பு தொடர்ச்சியை) அழிப்பவனோ, எவனிமிடருந்து மங்களம் பிறக்கிறதோ, எவனிடமிருந்து (எல்லா) ஸந்தோஷமும் உண்டாகிறதோ பாதிமதி முடியோனாகிய அவனுக்கு வணக்கம். மீண்டும் வணக்கம். 12

தென்முகமாய் அமர்ந்திருப்பவனும் (தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபமாக இருப்பவரும்), மௌனத்தினால் ஐயமறுப்பவனுமான உமக்கு வணக்கம். சங்கரனுக்கு வணக்கம். காமத்தைவென்றவனுக்கும் காலத்தை வென்றவனுக்கும் (காமனையும் காலனையும் வென்றசிவனுக்கு) வணக்கம். 13

கார்ப்பவனான உமக்கு வணக்கம். எல்லா மங்களங்களுக்கும் இருப்பிடமாகிய உமக்கு நமஸ்காரம். கோணல்வழியில் செல்கிறவர்களை நல்லவர்களாக ஆக்கிய (பாம்பை அமைதிப் படுத்திய பரமசிவனான) மாந்த்ரிகரான உமக்கு வணக்கம். 14

அண்டினவர் விரும்பிய வரம் அளிப்பவனே (வரதராஜப் பெருமானே), மாமரத்தை ஆச்ரயித்திருப்பவனே (ஏகாம்ரேச்வர). [உடனிருப்போர்க்கு பரம கதியாக இருப்பவனே] சிதாகாசத்தில் விளையாடுபவனே [ஹ்ருதயாகாசமாகிற ப்ரஹ்மத்தில் திளைப்பவனே] [சிதம்பரத்தில் லீலை புரியும் நடராஜனே], த்யாகத்தின் தலைவனே [த்யாகராஜ], ஒளிமயமானவனே [ஜ்யோதிஸ்ஸ்வரூபமான அருணாசலேச்வரனே], ரஸமயமானவனே [இன்பமயமானவனே] [ஜலமயமான ஜம்புகேச்வர] 15

அடைக்கலமடைந்தவர்களுக்கு ப்ராணனாக இருப்பவனே
[சரண் அடைந்தவர்களுக்காக வாயுரூபமாக உள்ள
காளஹஸ்தீச்வரனே], ஸம்ஸார வாழ்க்கையாகிற வியாதிக்கு
வைத்யம் செய்யும் ஈச்வரனே [வைத்யேச்வரனே], உனக்கு
வணக்கம். பக்தர்களுக்கு அருளுவதற்காக பிக்ஷை ஏற்ப
வருக்கு [பிக்ஷாடன மூர்த்திக்கு] வணக்கம். 16

பக்தர்களின் பாபமாகிற விஷத்தைப் பருகுகிறவரும்
(பாபத்தை நீக்குபவரும்) வ்ருஷபத்தின்மேல் ஏறி அமர்ந்
திருப்பவரும் ஆன உமக்கு நமஸ்காரம். அன்னம், ப்ராணன்,
மனது ஆகிய மூன்று புரங்களுக்கு அப்பாற்பட்டவரே!
உமக்கு வணக்கம். 17

ஸந்யாஸிகளின் கூட்டங்களுக்குத் தலைவரும் ஸ்வாமிநாதரு
மான [எல்லாவற்றிற்கும் ஸ்வாமியும் (உடையவரும்) எல்லா
வற்றிற்கும் நாதரும் (காப்பவரும்) ஆன [ஸுப்ரஹ்மண்யஸ்வ
ரூபமான] உமக்கு வணக்கம். ஸ்ரீசிவாஸ்தானத்தில் ஸ்திரமாக
வஸிப்பவரும் அவ்விடத்தின் பெயரை (அதனால்) உண்மை
யாக்கிய வருமான உமக்கு நமஸ்காரம் 18

சந்த்ரனைத் தலையில் சூடிய பரமேச்வரரேயான சந்த்ர
சேகரரே. உமக்கு நமஸ்காரம். உயர்ந்த ஐச்வர்யத்தால்
(ப்ரஹ்மஜ்ஞானத்தால்) இந்த்ரனே! வணக்கம். வாக்கினால்
ஸரஸ்வதியே! உண்மை, பொய் என்ற பால், நீர் இவற்றைப்
பகுத்து அறியும் (ஆற்றல் படைத்த) பரமஹம்ஸரே [உயர்ந்த
வகை அன்னப் பறவை போன்றவரே] உமக்கு நமஸ்காரம். 19

மூன்றற்றவரும் [காமக்ரோதலோபங்கள் இல்லாதவரும்]
[அத்ரி போன்றவரும்] முக்குணங்களுக்கப்பாற்பட்ட ப்ரஹ்
மத்தில் நிலைபெற்றவருமான உமக்கு வணக்கம். ஆனந்தம்
என்கிற ப்ரஹ்மஜ்ஞானத்தின் குருவே [அதைபோதிப்பவரே],
(ப்ருகுவல்லியில் கூறப்பட்ட ப்ரஹ்மஜ்ஞானத்தைப் புகட்டிய
ப்ருகுவான] உமக்கு வணக்கம். 20

ப்ரபஞ்சமாம் மாயையை இகழ்ந்து நிற்பவரான குத்ஸர்
எனும் ரிஷி போன்ற உமக்கு வணக்கம். வசிகளுள் சிறந்த
வரும்) (ப்ரஹ்மஜ்ஞானமாகிற செல்வத்தைப் பெற்றவர்
களுள் சிறந்தவரும்) ரகுவம்சத்தில் பிறந்த ராமனுடைய 21
(ராகவனுடைய) குருவான வஸிஷ்டரான உமக்கு வணக்கம்.

நூறு மடங்கான ஆனந்தத்தை உண்டாக்குபவரும் ஜ்ஞானி
களுக்குள் சிறந்தவரும் ஆன (சதானந்தரின் தந்தையான
கௌதமர் போன்ற) உமக்கு வணக்கம். தென் திசையின்
குருச்ரேஷ்டரான அகஸ்த்யரான (அகஸ்த்யர் போன்ற) 22
உமக்கு நமஸ்காரம்.

வேதங்கள், ஸ்ம்ருதிகள் இவற்றின் வழியைக் காட்டும் குரு
வாம் யாஜ்ஞவல்க்யரான உமக்கு வணக்கம். மோக்ஷமார்க்
கத்துக்கு ஸாதனமான வீணையை மீட்டுவதில் விற்பன்னரான 23
உமக்கு நமஸ்காரம்.

ராமனுக்கு [ராகவனுக்கு] புகழளித்த வால்மீகியான உமக்கு நமஸ்காரம். பாரததேசத்தில் புகழப்பட்ட பெருமையை யுடைய [பாரதம் இயற்றியதால் பெருமையடைந்த] வ்யாஸ ரான உமக்கு மீண்டும் மீண்டும் வணக்கம். 24

ப்ரஹ்மத்தில் நிலை பெற்றிருத்தலாலும் பகவத் பக்தர்களின் பெருமையை சாற்றுவதாலும் அம்பாளால் லாலனை செய்யப் பட்டதாலும் [பாகவதத்தின் பெருமையை அறிவித்த லாலும்] நீர் சுகராக விளங்குகிறீர் உமக்கு நமஸ்காரம். 25

வேதத்தை நன்கு காக்கும் ஜைமினியே! ப்ரஹ்மத்தை அறிந்த பாதராயணர் என்னும் வ்யாஸரே! குணங்கள், அகுணங்கள் இவற்றையறிந்த கபிலரே! யோகத்தில் நிலை பெற்ற பதஞ்ஜலியே! 26

ந்யாயத்தைக் கூறும் அக்ஷபாத கௌதமரே! விசேஷங்களை நன்கறிந்த காச்யபரான கணாத முனிவரே! ஆகம சாஸ்த் ரங்களை அறிந்தவரும் மரபுகளை (ஸம்ப்ரதாயங்களை) பின் பற்றுபவருமான உமக்கு வணக்கம். கோவிந்த பகவத் பாத ரின் நினைவில் ஒன்றிப் பிரகாசிப்பவரான உமக்கு நமஸ்காரம். 27

(நித்யாநித்யவஸ்து) விவேகத்தின் மகுடமணியும் [விவேக சூடாமணியை இயற்றியவரும்] ஆயிரக்கணக்கான உபதேசங் கள் செய்தவரும் [உபதேசஸாஹஸ்ரீ எழுதியவரும், [புத்தி மானும் [மனீஷா பஞ்சகம் இயற்றியவரும்], ஸமநோக்குடை யவரும் தக்ஷிணாமூர்த்தியுமான உமக்கு வணக்கம். 28

ப்ரஹ்மவித்யை [ஆத்மஜ்ஞானம்]க்கு அணியாக உள்ள [ப்ரஹ் மவித்யாபரணம், ஒரு அத்வைதக்ரந்தம்] மண்டனமிச்ரரான உமக்கு வணக்கம் உரியதாகுக. 29

செய்யவேண்டிய செயலொன்றில்லை என்னும் தத்வத்தால் மிளிரும் மனதினரான உமக்கு வணக்கம் [நைஷ்கர்ம்யஸித்தி, மானஸோல்லாஸம் இரண்டும் நூல்கள்]. சான்றோராகிய சிஷ்யக் கூட்டங்கள் சரணடையும் தாமரைத்தாள்களை உடைய [பத்மபாதராகிய] உமக்கும் நமஸ்காரம். 30

உள்ளங்கை நெல்லிக்கனிபோல் [ ஹஸ்தாமலகர்போல் ] ப்ரஹ்மத்தின் உண்மையை நேரில் கண்டறியும் உமக்கு வணக்கம். [ஸம்ஸார பந்தத்திலிருந்து] விடுதலை பெற்ற ஆத்ம ஸ்வரூபமுடையவரே, [விமுக்தாத்மாவே!] வ்யாக் யானம் செய்வதில் ப்ருஹஸ்பதியே [வாசஸ்பதி மிச்ரரே] உமக்கு நமஸ்காரம். 31

பக்தர்களுக்கு [வேண்டியதைத்தரும்] கல்பதருவே [அமலா னந்தர் இயற்றிய அத்வைத க்ரந்தமான கல்பதரு என்னும் வ்யாக்யானம்], சித்ஸுகத்தை (ஆத்மஸுகத்தை) அனுபவிப் பவரே [சித்ஸுகாசார்யரே] உமக்கு வணக்கம், (உம்) புகழின் நறுமணத்தால் (பரிமளத்தால்) பக்தர்களாகிற தேனீக்களை ஈர்ப்பவரே [பரிமளம்—அப்பய்ய தீக்ஷிதரின் கல்பதருவ்யாக் யானம்உமக்கு] நமஸ்காரம். 32

வித்யைகளின் அடர்ந்த சேர்க்கையே [வித்யாரண்யரே!]
ஜீவன் முக்தியை புலப்படுத்துபவரே, [ப்ரகாசாத்மர் எழுதிய
ஜீவன் முக்திவிவேகம் என்பது நூல்]. உமக்கு வணக்கம்.
அத்வைதம் நிறுவ அடிப்படையான [அத்வைதஸித்தி—
மதுஸூதனஸரஸ்வதியின் நூல்] மதுஸூதனரே [மஹா
விஷ்ணுவே—அவரது அவதாரமான வ்யாஸரே!] உமக்கு
வணக்கம். 33

[எந்த] உம்முடைய கட்டளையால் ஆங்காங்கு பிரஸித்தமான
க்ஷேத்ரங்களில் [புண்யஸ்தலங்களில்] சிஷ்யர்களுடன் கூடிய
[ஆதி] சங்கரரின் ஆலயங்கள் நிறுவப்பட்டன[வோ] [அந்த]
உமக்கு நமஸ்காரம். 34

அறுபதாண்டு நிறைவு விழா—கலவை வேத நிதி முதலிய
வற்றால் பரீக்ஷையில் (தேர்ச்சி பெற்றவர்களுக்கு) ஸம்பாவனை
யளித்தல் முதலியவற்றால், முறைப்படி வேதம் பயில்வதைப்
போஷித்தவரும் 35

மறைந்த [நலிவுற்ற] வேதசாகைகளை ஸமுத்தாரணம் செய்த
வரும் வேத மாநாடுகளைக் கூட்டியவரும் வேதாத்யயன
பாடசாலைகளை நிறுவியவருமான உமக்கு நமஸ்காரம். 36

வேத தர்மபரிபாலன ஸபையை அமைத்த உமக்கு 'தர்மஜ்ஞ'
என்ற விருதளிப்பதன் மூலம் ஸ்மார்த்த கர்மாக்களை [ஸ்ம்ருதி
களின்படி ஒருவொருவரும் செய்ய வேண்டிய கடமைகளை]
நன்கு ரக்ஷிக்கும் உமக்கு நமஸ்காரம். 37

எவரால் ஸம்ஸ்க்ருத அறிவை வளர்ப்பதற்காக 'அமரபாரதி'-
யும் (அதன் மூலம் நடத்தப்படும்) பரீக்ஷைகளும் பாடசாலை
களும் அமைக்கப்பட்டனவோ, தீர்க்கதர்சியான அப்படிப்
பட்ட உமக்கு வணக்கம். 38

பழுதுபட்ட ஆலயங்களைப் புதுப்பித்தல், கும்பாபிஷேகங்
கள். இவற்றை அடிக்கடி (செய்ய) உற்சாகப்படுத்தி கோயில்
களில் ஜனங்களுக்குள்ள நம்பிக்கையை வளர்க்கும் உமக்கு
நமஸ்காரம். 39

ஆண்டாள், மாணிக்கவாசகர் இவர்களின் மொழி (திருப்
பாவை) திருவெம்பாவை பற்றிய மார்கழி மாதத்து மாநாடு
களால் சைவவைணவ நட்பை (பரஸ்பர நல்லெண்ணத்தை) 40
வளர்க்கும் உமக்கு நமஸ்காரம்.

தர்மத்தை போதித்து வளர்க்கும் (மடங்களின்) பீடங்களின்
குழுக்கள், கூட்டங்கள் இவற்றால் ஒருமித்த மனதுடன் தர்மங் 41
களை ப்ரசாரம் செய்யும் வழியைக் கண்டவரும்

'காமகோடி கோசமாலா' (வெளியீடுகளின்) மூலம் தமிழ்
மொழி பெயர்ப்புடன் கூடிய பல்வேறு ஸ்தோத்ர வரிசைகளை 42
வெளியிட்டவரும் ஆன உமக்கு நமஸ்காரம்.

வேதாந்தம், ந்யாயம், மீமாம்ஸை (இந்த சாஸ்த்ரங்களில்) வித்வான்களின் வாக்யார்த்தங்களை (நடத்தி) கௌரவித்த லால் பலமதங்களில் வித்வத்திறமையை வளர்க்கும் உமக்கு வணக்கம். 43

வ்யாஸ-ஆகம-கலா-தந்த்ர-ஜ்யோதிஷம் ஆகியவற்றில் மிகச் சிறந்த அறிவுடையவர்களைக் கூட்டுவதால், சிதைந்திருக்கும் மரபுகளுக்கு உயிரூட்டும் மருந்தே! உமக்கு வணக்கம். 44

ஏழ்மையிலுள்ள பெண்களின் விவாஹத்துக்கு உதவியாக பொருள் (நிதி) தருபவரும், 'ஸ்ரீராமஜயம்' என்று எழுது வதில் ஜனங்களுக்கு உற்சாகத்தைப் போஷிப்பவருமான உமக்கு நமஸ்காரம். 45

உணவுக்குறை நீங்க பிடியரிசித் திட்டம் எவரால் காணப் பட்டதோ, எப்பொழுதும் விளங்கும் மதி நுட்பம் நிரம்பிய வரான அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம். 46

வைத்யசாலைகளில் நோயுற்றோருக்கு ஆறுதலளிக்கவும் [அவர் களுடைய நோய் தீர்ந்து] ஆரோக்யம் ஏற்படவும் ப்ரஸாதம் கொடுத்து தன் பக்தர்களை அவர்களிடம் அனுப்பும் உமக்கு வணக்கம். 47

சிறைச்சாலையில் அடைபட்டோருக்கு திருவிழாக் காலம் முதலியவற்றில் அவர்கள் (சிறிதேனும்) மகிழ்ச்சியடையவும்) அவர்களுக்கு நற்புத்தி ஏற்படவும் தின்பண்டங்கள் முதலிய வற்றை அனுப்ப ஏற்பாடு செய்யும் உமக்கு நமஸ்காரம், 48

ஒளியின் நிதியே [கதிரவனே]! கலைகள் நிரம்பியவரே [மதியே]!, (உண்மை) அறிவு பெற்றவரே, சாந்தமானவரே [புதனே]!, ஆசார்யரே [குருவே]!, கவியே [சுக்ரனே]!, உறுதி யாக இருப்பவரே [சனைச்சரனே], எல்லா க்ரஹங்களின் உருவத்தையும் கொண்டவரே! ஒளிமயமான மண்டலத் தால் ப்ரகாசிப்பவரே!
49

லலிதாதேவியை [த்ரிபுராம்பிகையை] இடையறாது உபாஸனை செய்பவரே, காளியின் தாஸரே [காளிதாஸரே]! உமக்கு வணக்கம். பாமேச்வரனின் விபூதி (திருநீறு)ப்பூச்சால் பிரகா-சிக்கும் உடலை உடையவரே [பவபூதியே]! ப்ரஹ்மதேஜஸ்-ஸால், பிரகாசத்தில் ஸூர்யன் போன்றவரே, பாரவியே! 50

எப்பாபமுமற்றவரே, மாகரே! மோக்ஷ விஷயத்தில் ஆனந்தம் நிரம்பியவரே [ஸ்ரீஹர்ஷரே]! ஸ்ரீகாமாக்ஷிதேவியை ஆழ்ந்து த்யானம் செய்து மௌனமாக இருக்கும் மூககவியான உமக்கு நமஸ்காரம்.
51

யாவரையுமே தன்னைச் சார்ந்தவரென எல்லா க்ஷேமங்களை யும் விசாரிப்பவரும் ராமனைப்போல் எல்லா ஜனங்களுக்கும் ப்ரியமானவரும் ஆன உமக்கு நமஸ்காரம்,
52

எவ்வாறு தன்னையடைந்தவர் ஒவ்வொருவரும், 'நானே பரமாசார்யருக்குப் பிடித்தவன்' என்று அபிமானம் கொள் வாரோ அவ்வாறு விச்வாஸத்தை ஊட்டும் உமக்கு வணக்கம் 53

ஒப்பற்ற ஒருவர், பெருமையில் இரண்டற்றவர். முக்குணங் கள் கடந்தவர், பக்தர்களுக்கு நான்கு புருஷார்த்தங்களையு மளிப்பவர், ஐம்புலன்களையும் ஆறு (காமம் முதலிய) சத்ருக் களையும் ஜயித்தவர், ஒளியில் ஏழு குதிரைகளை உடைய ஸூர் யன், அஷ்டமூர்த்தியான பரமசிவனுக்கு (அநவம:) குறைவு படாதவர், பத்து திக்குகளிலும் ப்ரஸித்தி பெற்றவர். 54

நடமாடும் தெய்வம் இவர் என்று எவர் எல்லோராலும் பறை சாற்றப்படுகிறாரோ அந்த ஸ்ரீஜகத்குருவுக்கும் ஸ்ரீஜயேந்த்ர குருவுக்கும் நமஸ்காரம். 55

ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்ரீசந்த்ரசேகரேந்தர ஸரஸ்வதீ பெரியவர்களால் அனுக்ரஹித்தளிக்கப்பட்ட 'கவிகோகில' 'ஸகல கலாகலாப' என்னும் விருதுகளால் போற்றப்பட்ட 'வெ. ராகவன்' என்பவரால் இயற்றப்பட்ட ஸ்ரீசந்த்ரசேக ரேந்த்ர ஸரஸ்வதீ பஞ்சபஞ்சாசத் (ஐம்பத்தைந்து) ஸ்தோத்ரம்.